சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில் நடந்த விழாவில், மத்திய மந்திரி ஹர்தீப் சிங் பூரி, தமிழக அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், எம்.சி.சம்பத், டாக்டர் சரோஜா மற்றும் அதிகாரிகள் முதல் மெட்ரோ ரெயிலை வழியனுப்பி வைத்தபோது எடுத்த படம்.

வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ். இடையே மெட்ரோ ரெயில் சேவை

பிரதமர் மோடி தொடங்கிவைத்தார்

சென்னை, பிப்.11-

வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ். இடையே மெட்ரோ ரெயில் போக்குவரத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார். இதில், பொதுமக்கள் ஆர்வமாக பயணம் செய்தனர்.

வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ்.

சென்னையில் மாநகரில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு மெட்ரோ ரெயில் திட்டத்தை செயல்படுத்த கடந்த 2007-ம் ஆண்டு முடிவு செய்யப்பட்டது. அதன்படி, சென்னை விமான நிலையம் முதல் வண்ணாரப்பேட்டை வரை முதல் வழித்தடத்திலும், சென்டிரல் முதல் பரங்கிமலை வரை 2-வது வழித்தடத்திலும் மெட்ரோ ரெயில் சேவைக்கான பணிகள் நடைபெற்று வந்தன.

அதில் பணிகள் முடிந்ததும், விமானநிலையத்தில் இருந்து தேனாம்பேட்டை (டி.எம்.எஸ்.) வரையிலும், பரங்கிமலையில் இருந்து சென்டிரல் வரையிலும் மெட்ரோ ரெயில் சேவை தொடங்கியது. மீதம் உள்ள டி.எம்.எஸ்-வண்ணாரப்பேட்டை இடையிலான பணிகள் முடிவடைந்து மெட்ரோ ரெயில் சேவை நேற்று தொடங்கப்பட்டது.

சேவை தொடக்கம்

திருப்பூரை அடுத்த பெருமாநல்லூர் புதுப்பாளையம் பிரிவில் அரசு விழா நேற்று மாலை நடைபெற்றது. இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி, கவர்னர் பன்வாரிலால் புரோகித், தமிழக முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சபாநாயகர் தனபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் புதிய திட்டங்களுக்கு பிரதமர் மோடி பொத்தானை அழுத்தி அடிக்கல் நாட்டினார். மேலும் நிறைவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார். விழா மேடையில் இருந்து, சென்னையில் மெட்ரோ ரெயில் சேவையை காணொலி காட்சி மூலமாக பச்சை கொடியசைத்து பிரதமர் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து, சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் நடந்த விழாவில் மத்திய மந்திரி ஹர்தீப் சிங் பூரி, தமிழக அமைச்சர்கள் ஜெயக்குமார், எம்.சி.சம்பத், டாக்டர் சரோஜா, அரசு அதிகாரிகள் கலந்துகொண்டு முதல் ரெயிலை வழியனுப்பி வைத்தனர்.

பின்னர் வண்ணாரப்பேட்டைக்கு மத்திய மந்திரி, தமிழக அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தனர். இதையடுத்து வண்ணாரப்பேட்டையில் இருந்து டி.எம்.எஸ். வரை தொடர்ந்து மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட்டன. பொதுமக்களும் ஆர்வமாக மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தனர்.

இதன் மூலம் முதல்கட்ட மெட்ரோ ரெயில் பணிகள் நிறைவடைந்து உள்ளது.

வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ். இடையே தொடங்கப்பட்ட மெட்ரோ ரெயிலில் பயணம் செய்த பொதுமக்களை படத்தில் காணலாம்.

பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்த பணிகள்

பிரதமர் நரேந்திர மோடி நேற்று திருப்பூரில் தொடங்கிவைத்த பணிகள் வருமாறு:-

அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்கள்

★ திருப்பூரில் 1 லட்சத்து 22 ஆயிரம் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் 7.46 ஏக்கர் பரப்பளவு இடத்தில் ரூ.75 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் 100 படுக்கை வசதி கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்டுமான பணி.

★ சென்னை விமான நிலையத்தை மேம்படுத்தி நவீனப்படுத்தும் திட்டம்.

★ திருச்சி விமான நிலையத்தில் ரூ.951 கோடியில் புதிய முனையம்.

நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட திட்டங்கள்

★ சென்னை கே.கே.நகரில் 19 ஏக்கர் பரப்பளவில் நவீன வசதிகளுடன் கூடிய இ.எஸ்.ஐ. மருத்துவ கல்லூரி மற்றும் 470 படுக்கை வசதி கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவமனை.

★ எண்ணூர் கடற்கரையில் உள்ள பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (பி.பி.சி.எல்) முனையம்.

★ சென்னை துறைமுகத்தில் இருந்து மணலியில் உள்ள சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்துக்கு (சி.பி.சி.எல்.) குழாய் மூலம் கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் திட்டம்.

தொடக்க விழா

★ சென்னை டி.எம்.எஸ்-வண்ணாரப்பேட்டை இடையேயான பாதையில் மெட்ரோ ரெயில் போக்குவரத்து சேவை.

மெட்ரோ ரெயில் துளிகள்

மெட்ரோ ரெயில் கட்டணம் எவ்வளவு?

வண்ணாரப்பேட்டையில் இருந்து செல்ல மெட்ரோ ரெயில் கட்டண விவரம் வருமாறு:-

விமானநிலையம், மீனம்பாக்கம், நங்கநல்லூர் ரோடு ரூ.60, ஆலந்தூர், கிண்டி, சின்னமலை, சைதாப்பேட்டை ரூ.50, நந்தனம், தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி. ரூ.40, அரசினர் தோட்டம் ரூ.30, சென்டிரல், ஐகோர்ட்டு ரூ.20, மண்ணடி ரூ.10, ஈக்காட்டுத்தாங்கல், அசோக்நகர், வடபழனி ரூ.60, அரும்பாக்கம், கோயம்பேடு பஸ் நிலையம், திருமங்கலம், அண்ணாநகர் டவர் ரூ.50, அண்ணா நகர் கிழக்கு ரூ.40, ஷெனாய்நகர், பச்சையப்பன் கல்லூரி, கீழ்ப்பாக்கம், நேரு பூங்கா ரூ.40, எழும்பூர் ரூ.30, பரங்கிமலை ரூ.60 என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

பயண நேரம்

சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து வண்ணாரப்பேட்டைக்கு 8 நிமிடத்தில் பயணிக்கலாம். அதேபோல் சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து டி.எம்.எஸ்.க்கு பயண நேரம் 12 நிமிடங்கள். டி.எம்.எஸ். ரெயில் நிலையத்தில் இருந்து விமான நிலையத்துக்கு 22 நிமிடத்தில் செல்லலாம். சென்டிரல்-எழும்பூர் 3 நிமிடமும், எழும்பூர்-கோயம்பேடு பஸ் நிலையத்துக்கு 22 நிமிடத்திலும் பயணிக்க முடியும்.

இன்று இலவச பயணம்

கோயம்பேடு-ஆலந்தூர், சென்டிரல்-விமானநிலையம் போன்ற மார்க்கங்களில் முதன் முதலாக ரெயில் போக்குவரத்து தொடங்கியபோது, பயணிகள் மத்தியில் மெட்ரோ ரெயிலை பிரபலப்படுத்துவதற்காக சில நாட்கள் இலவச சேவை அளிக்கப்பட்டது. பொதுமக்களும் ஆர்வமாக பயணம் செய்தனர்.

அதேபோன்று வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ். இடையே புதிய சேவை தொடங்கப்பட்டதை தொடர்ந்து இன்று (திங்கட்கிழமை) முழுவதும் அனைத்து மார்க்கங்களிலும் இலவச சேவை அளிக்கப்படுகிறது. அனைத்து தரப்பு மக்களும் இலவசமாக பயணம் செய்யலாம் என சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன மக்கள் தொடர்பு துணை இணை-இயக்குனர் எஸ்.பாண்டியன் தெரிவித்து உள்ளார்.

வடசென்னையில் போக்குவரத்து நெரிசல் குறையுமா?

பொதுமக்கள் எதிர்பார்ப்பு

சென்னை, பிப்.11-

வண்ணாரப்பேட்டைக்கு மெட்ரோ ரெயில் இயக்கப்படுவதால் வடசென்னையில் போக்குவரத்து நெரிசல் குறையுமா? என்பது பொதுமக்கள் எதிர்பார்ப்பாக உள்ளது.

இதுதொடர்பாக மெட்ரோ ரெயில் பயணிகள் கூறியதாவது:-

ஜெயந்தி (திருமங்கலம்):-

சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தின் 2-வது அடுக்கு தரை தளத்தில் இருந்து சுமார் 100 அடி ஆழத்தில் பிரம்மாண்டமான முறையில் அமைக்கப்பட்டு உள்ள ரெயில் நிலையத்தில் இருந்து பயணத்தை தொடங்கும் போது திகில் அனுபவமாக உள்ளது. அதேபோன்று சென்டிரல் ரெயில் நிலையம்- அரசினர் தோட்டம் ரெயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் கூவம் ஆற்றுக்கு கீழே அமைக்கப்பட்டுள்ள சுரங்கப்பாதையில் ரெயில் கடந்து செல்லும் போது பயணிகளுக்கு திகில் அனுபவத்தை ஏற்படுத்துகிறது. பாமர மக்களும் பயணம் செய்யும் வகையில் கட்டணத்தை சற்று குறைப்பது குறித்து ஆலோசிக்கலாம்.

சாந்தி(சென்னை):-

வடசென்னையில் எப்போதுமே போக்குவரத்து நெரிசல் அதிகம். தற்போது வண்ணாரப்பேட்டை வரை மெட்ரோ ரெயில் வந்திருப்பதால் அப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடி குறையுமா? என்ற கேள்வி எழுந்து உள்ளது. குறிப்பாக வடசென்னை பகுதிகளில் உள்ள வண்ணாரப்பேட்டை, பெரம்பூர், தண்டையார்பேட்டை மற்றும் சுற்றுவட்டார பகுதி மக்களுக்கு வண்ணாரப்பேட்டை வரை மெட்ரோ ரெயில் இயக்கப்படுவது ஒரு பெரிய வரப்பிரசாதமாக உள்ளது.

சுமதி(வண்ணாரப்பேட்டை):-

வடசென்னையில் உள்ள மின்சார ரெயில் நிலையங்களில் எத்தனை வசதிகள் செய்து தரப்பட்டாலும், சமூக விரோதிகளின் கூடாரமாகத்தான் பெரும்பாலான ரெயில் நிலையங்கள் காட்சி அளிக்கின்றன. எனவே சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களில் பெண்கள் பயமின்றி பயணம் செய்ய கூடுதல் பாதுகாப்பு வசதிகள் செய்து தர வேண்டும்.

ஜெயந்தி மற்றும் சாந்தி.

ஜோஸ்பின்(வியாசர்பாடி):-

வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பது முன்னோர் வாக்கு, ஆனால் சென்னையை பொறுத்தவரையில் தெற்கு வாழ்கிறது, வடக்கு தேய்கிறது என்ற அளவில் தான் இருக்கிறது. குறிப்பாக வடசென்னையில் அடிப்படை வசதிகள், போக்குவரத்து நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பொதுமக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது வண்ணாரப்பேட்டை வரை மெட்ரோ ரெயில் ஓடியதை வரவேற்கிறோம். இனிமையான பயணமாக இருந்தது. நேரம் மிச்சம் மற்றும் மாசு இல்லாத பயணமாக இருந்தது.

ஜோஸ்பின்